# நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை

**(2017 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 01ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை)**

2017 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 01ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் நிதி ஆணைக்குழுவினது முக்கிய செயற்பாடுகளை இச் செயலாற்றுகை அறிக்கை ஆனது உள்ளடக்கியுள்ளது.

## 01. 2018 ஆம் ஆண்டுக்கான பரிந்துரைகள்

2018 ஆம் ஆண்டுக்கான பரிந்துரைகள் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டுக்குரிய மூலதன மீண்டெழும் செலவின பகிர்விற்காக 06.11.2017 இல் பாராளுமன்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. (13ஆவது திருத்தச் சட்டமூலத்தின் 154 (ஜே) உறுப்புரைக்கு அமைவாக)

சமர்ப்பிக்கப்பட்ட முக்கிய பரிந்துரைகள் வருமாறு:

- நிதி ஆணைக்குழுவானது அர்த்தமுள்ள முக்கிய வகிபாகமாக மாகாணங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கீட்டினை கருத்தில் கொள்வது அவசியம். மாகாணங்களுக்கான நிதி ஒதுக்கீட்டினை நிர்ணயிப்பதற்கு தற்போது ஒரு முறைமை இல்லை திட்டமிடல் முறைமையில் இருந்து கண்காணிப்பு மற்றும் கணக்கீட்டுடன் கூடிய வரைமுறை ஆய்வு செய்யப்படல்.

- அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயப்பரப்பிற்குக் கீழ் உள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான செலவினங்கள் மீதான நிதிகளை மாகாண சபைகளினூடாக மேற்கொள்ளப்படல் வேண்டும் என பரிந்துரைக்கிறது. இதற்கு மேலதிகமாக அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயப்பரப்பிற்குள் நிரல் அமைச்சுக்களினால் அமுலாக்கப்படுகின்ற அனைத்து கருத்திட்டங்களும் மாகாண சபைகளினூடாக அமுல் படத்தப்படல் வேண்டும் எனவும் பரிந்துரைக்கிறது.

- தேசிய உப தேசிய திட்டமிடல் முறைமைக்கான பொதுவான வரைபுச்சட்டத்தினை அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயப்பரப்பிற்கு அமைவாக தாபித்தல்

- மாகாணங்களினது மனித வள திறனை மேம்படுத்த அதிக முன்னுரிமை அளித்தல் வேண்டும்

- மாகாணங்களினது எடுக்கப்படாத வருமான ஆதாயங்களிலிருந்து மாகாண வருவாய் அதிகரிப்பினை மேம்படுத்தல்

- மாகாணங்களில் இளைஞர்களின் திறன்அபிவிருத்தியினை மேம்படுத்தல்

- தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் தனியார் முதலீட்டுக்கான சிறப்பு சலுகை

பொதுத்திறைசேரியின் நிதி ஒதுக்கீடு நிதி ஆணைக்குழுவினது பரிந்துரையில் இருந்து விலகிச்சென்றுள்ளது இந்த விடயமானது தொடர்ந்து பின்பற்றப்படுகிறது.

**02. மாகாண வருடாந்த அபிவிருத்தித்திட்டங்களின் திருத்தம் - 2017**

மாகாணங்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக மாகாண வருடாந்த அபிவிருத்தித்திட்டஙகளில் பரந்த விடயப்பரப்பில் திருத்தம் மேற்கொள்வதற்கு அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

**03. நிதி ஆணைக்குழுவினதுவருடாந்த அறிக்கை - 2016**

நிதி ஆணைக்குழுவினது 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய பிரதிகள் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2017 டிசம்பர் 05 ஆம் திகதி பாராளுமன்றில் வருடாந்த அறிக்கையை சமர்ப்பிக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

**04. மாகாண வருடாந்த அபிவிருத்தித்திட்டங்களுக்கான வழிகாட்டி**

2018ஆம் ஆண்டுக்கான மாகாண வருடாந்த அபிவிருத்தித்திட்டங்கள் தயாரிப்பதற்கான வழிகாட்டி அனைத்து மாகாணங்களுக்கும் அனுப்பப்பட்டது.

**05.மூலோபாயத்திட்ட மீளாய்வும்/ அமுலாக்கலும்**

நிதி ஆணைக்குழுவினது மூலோபாயத்திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டது.

**06.மாகாணங்களுக்கான கணக்கு அறிக்கை தயாரித்தல்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது திணைக்களத்தால் முன்வைக்கப்பட்ட கிழக்கு,வடமத்தி, மற்றும் மேல் மாகாணங்களது கணக்காய்வு அறிக்கை ஆராயப்பட்டு சுட்டிக்காட்டலுடன் மாகாணங்களது பொறுப்புக் கூறலை மேலும் மேம்படுத்தும் நோக்கில் தொடர்புடைய மாகாணங்களது ஆளுநர்கள் மற்றும் பிரதம செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டது.

**07. நிதி ஆணைக்குழுவிற்கான புதிய அலுவலகக் கட்டட கட்டுமானம்**

நிதி ஆணைக்குழுவினது புதிய அலுவலக கட்டடகட்டுமானம் முன்னேற்றகரமாக உள்ளது. மூன்று முன்னேற்ற மீளாய்வுக்கூட்டங்கள் நிதி ஆணைக்குழுவிலும் ஏனைய முன்று தொழில்நுட்ப கூட்டங்கள் திட்ட ஆலோசனைப்பிரிவு (மொரட்டுவ பல்கலைக்கழக கட்டட நிர்மாண பீடம்) மற்றும் ஒப்பந்தகாரர் பங்களிப்புடனும் இடம் பெற்றது. அனுமதிக்கப்பட்டரூபா 300 மில்லியனில் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையான செலவினம் ரூபா 134 மில்லியன். திட்டமிடப்பட்டதனை விட 109 நாட்கள் பின்னடைவாக உள்ளமை கவனத்தில் கொள்ளப்பட்டு 2018 பெப்ரவரி 28 இல் கட்டட நிர்மாண திட்டத்தினை முடிவுறுத்த வேண்டுமென ஒப்பந்தகாரர்

அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறான நீண்ட பின்னடைவின் காரணமாக நிதி ஆணைக்குழுவானது நிபுணர்களிடம் 2018 ஆம் ஆண்டு ஜனவரி முதல் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கும்படி கோரியுள்ளது.



**படம்:** ***நிதி ஆணைக்குழுவிற்கான அலுவலகக் கட்டட கட்டுமானம்***

### 08. நிதி ஆணைக்குழுவின் தரவுத்தளம் MIS

நிதி ஆணைக்குழுவினது தரவுத்தளம் நிதி ஆணைக்குழுவின் செயற்பாடு மற்றும் நிறைவேற்றலுக்கு மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். 2017 ஏப்ரல் ஆணைக்குழுதகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை (ICTA) உடன்பேச்சு நடாத்தியது பல தொடர் கூட்டங்கள் நிதி ஆணைக்குழு மற்றும் ICTA உடன் இடம்பெற்றது. ICTA உடன் கலந்துரையாடலை நடாத்துவதன் மூலம் அர்த்தமுள்ள முடிவுகளை அடைய முடியும் எனினும் பொருத்தமான பெறுபேற்றினை அடையமுடியாததனால் நிதி ஆணைக்குழு இந்த விடயத்தில் விரைந்து செயற்படாவிடின் ஆசியாபவுன்டேசன் நிதியினை மீளப்பெறும் என்பதனால் கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பாடசாலையுடன் நிதி ஆணைக்குழு தரவுத்தள (MIS) உருவாக்கலுக்கான ஆரம்ப கலந்துரையாடலை மேற்கொண்டது. ICTA தொடர்ந்து தரவுத்தளம் (MIS) உருவாக்கலுக்கான தனது ஆதரவினையும் வழிகாட்டல்களையும் வழங்கும்.

## 09. நிதி ஆணைக்குழுவினது சட்டவரைபு

நிதி ஆணைக்குழுவின் சட்டவரைபு உருவாக்கப்பட்டு மாண்புமிகு ஜனாதிபதிக்கு 09.11.2016 இல் சமா்ப்பிக்கப்பட்டது. ஜனாதிபதி செயலகம் ஆணைக்குழுவின் சட்டவரைபு பற்றிய சில அவதானங்களை அனுப்பியது இதற்கு நிதி ஆணைக்குழு பதிலளித்தது 15.12.2017 இல் அமைச்சரவை அங்கிகாரம் பெறுவதற்காக நிதி ஆணைக்குழுவின் சட்டவரைபு முன்வைக்கப்பட்டது.

## 10. கல்வி சுற்றுலா

நிதி ஆணைக்குழுவின் செயலாளா் ஏனைய தொடா்புடைய அலுவலா்கள் கெஸ்பாவ நகர சபைக்கு 07.11.2017 அன்று விஜயம் சென்றனா். இந்த விஜயத்தின நோக்கம் நகர சபையினது கட்டமைப்பு, அதனது கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வருமான செலவினங்களின் வகை, வருமான சேகரிப்பு, அபிவிருத்தித்திட்டங்கள், நூலக முகாமைத்துவம், உட்கட்டுமான பராமரிப்பு, கழிவு முகாமைத்துவம், முன்பள்ளி கல்வி, சமூக நலநோன்பு, நடவடிக்கைகள் மற்றும் சேமிப்பும் மூலதனமும் மற்றும் ஆளணி முகாமைத்துவம் பற்றி அறிவதாகும்.



*படம்: கெஸ்பாவ நகர சபை*

## 11. அலுவலா்களது இயலளவு விருத்தியினை மேம்படுத்தல்

### 11.1. பயிற்சி

தெரிவுசெய்யப்பட்ட சில துறைகளில் நிதி ஆணைக்குழுவின் அலுவலா்கள் பயிற்சியினைப் பெற்றனா்

- பயனுறுதியுள்ள நிா்வாகத் தோ்ச்சி (Effective Managerial Skills)
- திட்ட முன்மொழிவும் உருவாக்கமும்
- டியிற்றல் அரசாங்கம் (Digital Government)

- சைபர் பாதுகாப்பும் மற்றும் ஒழுக்க சைபர் இடமும் (Cyber Security and Ethics Cyber Space)
- திட்ட முகதமைத்துவம் (Project Management)
- தட்டச்சு உருவாக்கமும் முகப்பக்க வடிவமைப்பும் (Typesetting & Desktop Publishing)

### 11.2. விருந்தினர் விரிவுரை

திறந்த பல்கலைக்கழகத்தின் தொலைத்தொடர்பாடல் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி.மகிம் மென்டிஸ் அவர்கள் நிதி ஆணைக்குழுவில் நல்ஆட்சி உருவாக்கும் புலன்களின் ஒரு புறத்தோற்றம் பற்றிய விரிவுரையை வழங்கினார்.

### 11.3.அலுவலர்களின் கற்கை

நிதி ஆணைக்குழுவின் அலுவலர்கள் பின்வரும் விடயங்கள் சம்மந்தமாக நுட்பமான கற்கையினை மேற்கொண்டு முன்வைப்பனை வழங்கினர்.

| பெயர் | தலைப்பு |
|---|---|
| • திருமதி.திலோக்கா அபேசேகர உதவிப்பணிப்பாளர் | கிழக்கு மாகாண வருடாந்த அபிவிருத்தித்திட்டம் மீளாய்வு |
| • திரு.ரி.கே.புஸ்பசிறி தகவல் தொழில் நுட்ப அலுவலர் | செயற்கை நுண்ணறிவ தரவுப்பகுப்பாய்வு |
| • திருமதி.நிமலி ரத்னாயக்கா புள்ளிவிபர அலுவலர் | அபிவிருத்தியில் இடஅமைவு வறுமைக்குறிகாட்டி சமத்துவமின்மை 2016-2017 |

### 11.4. இலங்கை நிதி நிறுவனங்களுக்கான 2வது தேசிய பயிற்சிப்பட்டறையான புதுமையான காலநிலை நிதி இயங்கியல்

2017 நவம்பர் மாதம் 7-8 ஆம் திகதிகளில் இலங்கை பொருளாதார சமூக ஆணைக்குழுவும் (UNESCAP) ஆசிய பசுபிக் சுற்றுச்சூழல் அபிவிருத்தி நிலையமும் இணைந்து ஒழுங்கு செய்த வேலைப்பட்டறை வங்கிகளுக்கான கற்றல் நிறுவனத்தில் இடம் பெற்றது இதில் தலைவர் வளவாளராக பங்காற்றினார்.

### 11.5. பொது தனியார் கூட்டு பங்களிப்பு பணியாளருக்கான (PPP) பயிற்றுவிப்பாளருக்கான பயிற்சிப்பட்டறை (TOT)

USAID மற்றும் நிதி அமைச்சின் பொது நிதி திணைக்களமும் இணைந்து ஒழுங்கு செய்த வேலைப்பட்டறையானது 2017 நவம்பர் 28-29ஆம் திகதிகளில் கொழும்பு கில்ட்டன் ரெசிடன்சில் இடம் பெற்றது. நிதி ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் இரு அலுவலர்கள் இப் பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றினர். இப்பயிற்சியானது தேசியம், உப தேசியம் ஆகிய இரண்டினதும் தற்போதைய இயலளவு விருத்தியினை உறுதிப்படுத்துவதாகும்.

### 11.6. நிலைபேறான அபிவிருத்தியினது இலக்குகள் பற்றிய மாகாண மற்றும் மாவட்ட திட்டமிடலாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை

2017 ஒக்ரோபர் 20-21 திகதிகளிலும் மற்றும் நவம்பர் 9,10,11 ஆந் திகதிகளலும் நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன வாழ் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிலைபேறான அபிவிருத்தியினது இலக்குகள் பற்றிய மாகாண மற்றும் மாவட்ட திட்டமிடலாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஜெற்விங் புளு கெறிற்றஸ் (Jetwing Blue Heritors) விடுதியில் இடம் பெற்றது இதில் நிதி ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் இரு அலுவலர்கள் பங்குபற்றினார்கள்

### 11.7. இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர்கால கொள்கை வழிகாட்டல்கள் பற்றிய கருத்தரங்கு

இலங்கைப் பொரளாதார தொழில் சார் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர்கால கொள்கை வழிகாட்டல்கள் பற்றிய கருத்தரங்கு 2017 மார்கழி 11 ஆம் திகதி இங்கை தொழில் வல்லுனர்கள் அமைப்பின் மகாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது. நிதி ஆணைக்குழுவினது தலைவர் இக்கருத்தரங்கில் பங்குபற்றினார்.

### 11.8. பிரதேச அபிவிருத்திகான வருவாயினை மேம்படுத்தலுக்கான விளக்கங்கள் முன்வைப்பு

2017 ஒக்ரோபர் 31 இல் ஆசியா பவுண்டேசன் நிறைவேற்று இயக்குனர் திரு.சுபாகரன் அருமைத்துரை அவர்கள் பிரதேச அபிவிருத்திகான வருவாயினை மேம்படுத்தல் பற்றிய முன்வைப்பு விளக்கத்தினை நிதி ஆணைக்குழுவில் முன்வைத்தார்.

### 12. மேல் மாகாண விவசாய நீர்ப்பாசன மற்றும் கால்நடை துறை சம்மந்தமான விடயங்கள் தொடர்பான சந்திப்பு

விவசாய நீர்ப்பாசன மற்றும் கால்நடை துறை மாகாணத் திணைக்களங்களின் மாகாணப்பணிப்பாளருடன் சந்திப்பு 2017 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 03 ஆம் திகதி நிதி ஆணைக்குழுவில் இடம் பெற்றது.
மாகாண சபை பற்றிய விடயங்களை விவாதிக்கவும் மற்றும் தேவையான பரிந்துரைகளை வழங்குவதற்காகவும் மாகாண ஊழியர்களுக்கு ஒரு வாய்ப்பினை வழங்குவதே இக்கூட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

### 13. பாதீட்டு ஒதுக்கீடு மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான வழிகாட்டல் மற்றும் வருடாந்த அபிவிருத்தித்திட்டம் தயாரிப்பது சம்மந்தமான கூட்டம்

2017 ஒக்ரோபர் மாதம் 20 ஆம் மற்றும் நவம்பர் 21 ஆம் திகதி பாதீட்டு ஓதுக்கீடு மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான வழிகாட்டல் மற்றும் வருடாந்த அபிவிருத்தித்திட்டம் தயாரிப்பது சம்மந்தமான விசேட கூட்டம் நிதி ஆணைக்குழுவில் இடம் பெற்றது. அனைத்து மாகாணங்களிலும் உள்ள பிரதம செயலாளர்கள் பிரதிப் பிரதம செயலாளர்கள் (திட்டமிடல்) இதில் கலந்து கொண்டனர்.

### 14. மாகாணத் திணைக்களங்களின் அதிகாரிகளுடனான கூட்டம்

2017 டிசம்பர் மாதம் 05 ஆம் மற்றும் 08 ஆம் திகதிகளில் விவசாயம், கால்நடை, கல்வி, சிறுவர் நன்நடத்தை பராமரிப்பு, மேலைத்தேய வைத்தியம், சுதேச வைத்தியம், நீர்ப்பாசனம் மற்றும் வீதி களினது மாகாணப் பணிப்பாளர்கள் மற்றும் ஆணையாளர்களுடன் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பது தொடர்பாக கூட்டம் நிதிஆணைக்குழுவில் இடம் பெற்றது.



2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பது தொடர்பான முன்னேற்றத்தினைப் பற்றிய கருத்துக்களை முன்வைப்பதற்கு மாகாண அதிகாரிகளுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிப்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

**15. மாகாணங்களில் ஆளணி உருவாக்கலும் வெற்றிடங்களை நிரப்புதலுக்குமான கலந்துரையாடல்**

2017 டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி நிதி ஆணைக்குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணியும் பங்கு கொண்ட கலந்துரையாடல் இடம் பெற்றது. மாகாண சபை பரிந்துரைகள் சம்மந்தமாக ஓவ்வொரு மாகாண நிறுவனத்தினதும் பங்களிப்புடனும் ஓப்புதலுடன் கொள்கை முடிவு சிபாரிசுகள் அனுமதி எடுத்தல் இதன் பிரதான நோக்கமாகும்.

**16. சுயாதீன ஆணைக்குழுக்களினது பங்கு பற்றிய கலந்துரையாடல்**

2017 ஒக்ரோபர் 17 ஆம் திகதி மாண்புமிகு பாராளமன்ற உறுப்பினர் கலாநிதி. ஜயம்பதி விக்கிரமரத்ன தலைமையில் சுயாதீன ஆணைக்குழுக்கள் பங்கு பற்றிய கலந்துரையாடல் இடம் பெற்றது. இதில் சுயாதீன ஆணைக்குழுக்களினது பிரதிநிதிகள் நிதி ஆணைக்குழுவின் தலைவர் உட்பட நிதி ஆணைக்குழுவின் 03 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலின் நோக்கம் அனைத்து பிரதிநிதிகளும் ஆணைக்குழுக்களினது பிரச்சினைகள் பற்றி விவாதிக்கவும் அரசியலமைப்புக்குழுவிற்கு அவசியமான பரிந்துரைகள் செய்யவும் ஒரு வாய்ப்பை வழங்குவதாகும்.

**17. அரசியலமைப்பு குழுவுடனான சந்திப்பு**

அரசியலமைப்பு குழுவினது தலைவர் மாண்பு மிகு. கரு ஜெயசூரிய அழைப்பின் பெயரில் ஒரு கூட்டம் நடைபெற்றது இச்சந்திப்பில் சுயாதீன ஆணைக்குழுக்களினது செயல் திறன் தகுதி வாய்ந்த அலுவலர்கள் இல்லாததனால் பின்னடைவில் உள்ளது இவ்விடயத்தில் சுயாதீன ஆணைக்குழுக்கள் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற முடிவு செய்யப்பட்டு இம்முடிவிற்கு ஏற்ப நிதி ஆணைக்குழு பாராளமன்ற செயலாளர் நாயகத்திற்கு "சுயாதீன ஆணைக்குழுவிற்கான தனிப்பட்ட ஊழியர்களின் அமைப்பு" பற்றிய கடிதத்தினை சமர்ப்பித்துள்ளார். புதிய ஆளணிகளின் தேவைகள் (சிறப்புத் தேர்ச்சி பெற்றோர் ஒப்பந்த அடிப:படையில்)மேற்கொள்ளப்படுகிறது.

**18. தேசிய சுகாதார குழுக் கூட்டம்**

2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி BMICH இல் உள்ள லவன்டர் மண்டபத்தில் நடாத்தப்பட்ட தேசிய சுகாதார குழுக் கூட்டத்தில் நிதி ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் செயலாளர் கலந்து கொண்டனர். நிதி ஆணைக்குழுவும் இதில் ஓர் உறுப்பினராக உள்ளதால் இந்த சந்திப்பில் பல முக்கிய பிரச்சினைகள் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

- ஆரம்ப சுகாதார பராமரிப்பு மற்றும் பகுத்தறிவு சுகாதார பராமரிப்பு முறைகளைப் பலப்படுத்தல்
- நீண்ட கால சிறுநீரக நோய்த் தடுப்புக்கான பல உத்திகளை சுட்டிக்காட்டுதல்
- தொற்று நோயற்ற நோய்களுக்கு உரையாடல் மற்றும் கல்விமுறைமை சீர்திருத்தல் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை ஊக்குவிப்பதனை வலியுறுத்துதல் - ஒரு வாழ்க்கைத்திறன் அணுகு முறை
- மலேரியாவின் மறு அவசர நிலை

**19. உள்ளககணக்காய்வுக் குழு**

உள்ளக கணக்கு குழுவின் 03 வது கூட்டம் கணக்காய்வாளர் கண்காணிப்பாளர் மற்றும் பணிப்பாளர், கணக்கீட்டுமுகாமைத்துவ திணைக்களம் ஆகியோரின் பங்கு பற்றலுடன் இடம்பெற்றது கூட்டத்தின் முடிவுகள் நிதி ஆணைக்குழுவின் அனைத்து அலுவலர்களுக்கும் தேவையான நடவடிக்கையினை எடுப்பதற்காக அறிவிக்கப்பட்டது. மேலதிகமாக ஒழுங்கு படுத்தப்பட்ட அம்சங்களுடன் கூடுதலான உள்ளார்ந்த கணக்காய்வுச் செயற்திறனை முன்னெடுக்க நிதி ஆணைக்குழு தீர்மானித்தது.

**20. தேசிய மற்றும் மாகாணங்களுக்கு இடையில் உகந்த ஒருங்கிணைப்பு மூலம் அபிவிருத்தி செயன்முறைகளை முன்னேற்றுவதற்கான பட்டறையினது பின்னூட்டம்**

2015 ஜீன் 15 இல் இடம் பெற்ற பட்டறையினது முடிவுகளையும் பரிந்துரைகளையும் பின்பற்றுவதற்கு ஆணைக்குழு அடையாளங்காணப்பட்ட பிரச்சினைகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் ஒரு பட்டியலை தளார் செய்துள்ளது. ஒரு செயற்திட்டத்தடன் கூடிய சரிபார்க்கும் பட்டியல் ஜனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதன்படி ஜனாதிபதி செயலகம் 2017 செப்ரம்பர் 15 இல் கூட்டம் ஒன்றை நடத்தியது. சம்மந்தப்பட்ட அமைச்சுக்களின் மூத்த அதிகாரிகள் மற்றும் ஏனய தொடர்புடைய நிறுவனங்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஜனாதிபதியின் செயலகத்தின் வேண்டுகோளின் அடிப்படையில் நிதி ஆணைக்குழு இம் முன்னேற்றம் குறித்து ஒரு பின்னூட்டத்தினை நடத்தியது.

**21. நிதி ஆணைக்குழுவினது செயலாற்றுகை அறிக்கை**

2017 நவம்பர் மாதம் 07 ஆம் திகதி 2017 ஆம் ஆண்டுக்குரிய 2 ஆம் 3 ஆம் காலாண்டுக்கான நிதி ஆணைக்குழுவினது செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**22. ஆட்சிக் கோவை**

2017 டிசம்பர் 28 அன்று நிதி ஆணைக்குழுவில் இடம் பெற்ற கூட்டத்தில் நிதி ஆணைக்குழுவினது ஆட்சிக் கோவை சேர்த்துக்கொள்ளப்பட்டது இது நிதி ஆணைக்குழுவினது வெளிப்படைத்தன்மை பொறுப்புக்கூறல் மற்றும் செயல்திறனை அதிகரிக்கும்

**23. சிறப்பு ஆய்வுகள்**

நிதி ஆணைக்குழுவினது செயற் பாட்டுக்காக பல தொடர் சிறப்பு கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன

- இலங்கை அரசாங்கஙகளுக்கிடையிலான நிதியியல் உறவுகள்
- வீதி பராமரிப்புக்கான செலவினம் மற்றும் செலவு மீளப்பெறலுக்கான முன்மொழிவு
- மாகாண நிர்வாக மாகாண சபைகளின் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளின் ஆளணி
- சமமான பிராந்திய அபிவிருத்தி

**24. நிதி ஆணைக்குழுவினது கூட்டங்கள்**

நிதி ஆணைக்குழுவினது 04 கூட்டங்கள் இடம்பெற்றன

- 31.10.2017
- 24.11.2017
- 07.12.2017
- 28.12.2017

- ஒவ்வொரு ஆணைக்குழுவினது கூட்டத்திற்கும் முன்னராக ஆணைக்குழுவினது உப குழு கூட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றன
- கூட்டுக்குழுவினது கூட்டங்கள் - வாராந்த கூட்டுக்குழுவினது கூட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றன
- ஊழியர்களுக்கான கூட்டங்கள் 31.10.2017 மற்றும் 29.12.2017 இல் நடைபெற்றன